# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1889/35 - 2014 නොවැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2014.11.21

*1889/35 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்**

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 31 ஆம் உறுப்புரையின் (3அ) என்னும் பந்தியின் கீழ் செய்யப்பட்டுள்ளதும், 2014, நவெம்பர் 20 ஆந் திகதிய 1889/31 ஆம் இலக்க அதிவிசேஷ வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுமான பிரகடனத்தின் மூலம், சனாதிபதித் தேர்தலின் மூலம் மேலுமொரு காலப்பகுதிக்குப் பதவி வகிப்பதற்கான ஆணையொன்றுக்காக மக்களைக் கோரி நிற்கும் அவரது எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளாராதலாலும்;*

*அத்துடன், அப்பந்தியின் கீழ் பிரகடனமொன்று செய்யப்படுவதன் மீது சனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பொன்றை நடாத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர் தேவைப்படுத்தப்பட்டுள்ளாராதலாலும்;*

*ஆகவே, தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான், 1988 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு இக்கட்டளையின் மூலம் -*

(i) *அத்தகைய தேர்தலுக்கான வேட்பாளர்களின் பெயர்குறித்த நியமனத் திகதியாக 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் எட்டாம் திகதியையும்;*

(ii) *அத்தகைய தேர்தலுக்கான வேட்பாளர்களின் பெயர்குறித்த நியமனத்துக்கான இடமாக தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரியவையும் ;*

*அத்துடன்*

(iii) *அத்தகைய தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடைபெறும் திகதியாக 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் எட்டாம் திகதியையும் நிர்ணயிக்கின்றேன்.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தேர்தல்கள் ஆணையாளர்.*

*தேர்தல்கள் செயலகம்,*
*இராஜகிரிய,*
*2014, நவெம்பர் 21.*

*12-257*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*